- 067

SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
CENTRE FOR EXTERNAL DEGREES AND PROFESSIONAL LEARNING

**THIRD EXAMINATION IN BACHELOR OF ARTS (EXTERNAL) 2011/2012**
HELD IN NOVEMBER/DECEMBER 2013

# SOC 3.11 – SOCIOLOGY OF GENDER

**எவையேனும் ஐந்து (05) வினாக்களுக்கு மட்டும் விடை தருக 3 மணித்தியாலங்கள்**

---

01. அ) பால் (Sex), பால்நிலை (Gender) ஆகிய இரு பதங்களையும் வேறுபடுத்தி விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ) பெண்களை வலுவூட்டல் (Women Empowerment) எத்தகைய விடயங்களை உள்ளடக்கியிருக்கின்றது என்பதனை விபரிக்குக.

(10 புள்ளிகள்)

02. பெண்களுக்கெதிராகப் புரியப்படும் வன்முறைகளை விளக்கி, அவற்றை தடுப்பதற்கு முன்னெடுக்கக்கூடிய வழிமுறைகளை விளக்கி கருத்துரைக்குக.

(20 புள்ளிகள்)

03. அ) ஆணாதிக்கம் (Patriarchy) எனும் எண்ணக்கருவை வரையறை செய்க.

(08 புள்ளிகள்)

ஆ) பெண்களைக் கட்டுப்படுத்தும், ஆண் மேலாதிக்கத்தை தொடர்ந்தும் சமூகத்தில் பேணும் ஆணாதிக்கக் கட்டமைப்பு குறித்து சில்வியா வெல்பை (Silvia Welby) யின் கருத்துக்களை ஆராய்க.

(12 புள்ளிகள்)

04. "பெண்களின் வேலை தேடிய வெளியேற்றம் அவர்களது ஆளுமையை மட்டுமன்றி ஆணவத்தையும் (Disobedience) வளர்த்திருக்கின்றது" இக்கூற்றை ஏற்கின்றீரா? உமது விடையை தகுந்த புள்ளிவிபரங்களுடன் விளக்குக.

(20 புள்ளிகள்)

05. பெண்ணியம் தொடர்பான கோட்பாடுகளுள் மூன்றை சுருக்கமாக விளக்கி அவற்றுள் எது அல்லது எவை பெண்ணுரிமையை அடைய கூடுதல் பொருத்தமுடையது என கருத்துரைக்குக.

(20 புள்ளிகள்)

06. “ஆண்கள் மட்டுமன்றி பெண்களும் கல்வி பெறும் போதுதான் ஆரோக்கியமானதொரு சமூகத்தை கட்டியெழுப்ப முடியும்” இக்கூற்றை ஏற்கின்றீரா? உமது விடையை தகுந்த ஆதாரங்களுடன் தெளிவுபடுத்துக.

(20 புள்ளிகள்)

07. “மேற்கத்தேய உலகம் பெண் உரிமை தொடர்பாக சிந்திப்பதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே இஸ்லாம் பெண்களுக்கு பூரண உரிமைகளை வழங்கி அதனை நடைமுறைப்படுத்திக் காட்டியிருக்கின்றது” இக்கூற்றை விமர்சன ரீதியாக ஆராய்க.

(20 புள்ளிகள்)

08. எவையேனும் இரண்டுக்கு (02) சிறுகுறிப்பு எழுதுக

I. பெண்களும் அனர்த்தமும்
II. பெண்களும் அரசியலும்
III. பெண்கள் குறித்த இந்து சமயத்தின் சித்தரிப்பு

(2 x10=20 புள்ளிகள்)